

# சரியான பார்வை... சரியான வழி... சரியான செயல்! 8

– தா.நெடுஞ்செழியன்

இன்றைக்கு மனிதராகப் பிறந்த எல்லாருக்குமே எங்கோ ஓர் இடத்தில் அவரவர் திறமைக்கேற்றவாறு வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகளுக்கான தேடுதலை சிறுவயதில் இருந்து தொடங்க வேண்டும். ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்வியை ஒவ்வொரு தருணத்திலும் எழுப்பிக் கொண்டே இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு முயற்சியில் நாம் தோல்வியுற்றால், முடிந்த நிகழ்வைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்காமல், அந்த நிகழ்வினை அடுத்த கட்டத்துக்கு எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் என்று சிந்தித்துச் செயல்பட வேண்டும். அதனால் வாழ்க்கையிலும் சரி, கல்வியிலும் சரி, தேடுதல் இருந்து கொண்டே இருக்க வேண்டும். தேடுதலை யார் அதிகமாகவும், தீவிரமாகவும், ஆழமாகவும் செய்கின்றார்களோ, அவர்களே வாழ்க்கையில் வெற்றியை வெகுவிரைவில் அடைவார்கள்.

பொதுவாக நமது தேடல்கள் எல்லாம் நாம் வசிக்கும் இடங்களில், ஊர்களில் அல்லது மாநிலங்களுக்குள்ளேயே முடிந்துவிடுகிறது. இவற்றைத் தாண்டி உலக அளவில் தேடுதல்களைத் தொடங்காமல் இருப்பதுதான் நமது இலக்கை நாம் அடைய முடியாமல் செய்துவிடுகிறது.

புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகம். ஆனால் புற்றுநோயைத் தடுப்பதற்கான வழிகளைப் பற்றி படிக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையோ மிக மிகக் குறைவு. சென்னையில் உள்ள 'ஏயு – கே.பி.சி. சென்டர்' எம்ஐடியில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிறுவனமானது, மார்பகப் புற்றுநோய் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறது. இப்படி சென்னை குரோம்பேட்டையில் எம்ஐடியில் நடந்து கொண்டிருப்பது சென்னையில் உள்ள பலருக்கும் தெரியாது.

இதுபோன்ற தகவல்களைத் தேடும் ஆர்வமும் இன்றைய மாணவர்களிடையே குறைந்துவருகிறது. வாழ்க்கையிலும் கல்வியிலும் என்றென்றும் தேடல் மிக மிக அவசியமானது. தேடல் அதிகமாக இருந்தால்தான் நமக்கு வைரம் கூட கிடைக்கிறது. அது எளிதாகக் கிடைப்பதில்லை. இந்தத் தேடுதல் என்பது பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளில் இருந்தும் ஓரளவுக்கு மாணவர்களுக்குக் கிடைத்தாலும், தனிப்பட்ட மாணவர்கள் தங்களுடைய தேடுதலைத் தொடர வேண்டும்.

எந்தவொரு விஷயத்தைப் பற்றிய தேடுதலானாலும் அந்தத் தேடுதலை ஆழமாகவும் – மற்றவர்கள் முடியாது என்று சொன்னாலும் கூட – விடா முயற்சியுடன் தேடுதலுக்கான கடைசி இலக்கை அடைவதை நோக்கி – தொடர்ந்து தேடுதலில் ஈடுபட வேண்டும். அப்படி விடாமுயற்சியுடன் தேடுதலை நாம் தொடர்ந்தோமென்றால், வெற்றி நம் அருகிலேயே இருக்கிறது என்ற நம்பிக்கை உருவாகும்.

இன்றைக்கு நாம் எல்லாரும் நமக்கு அருகாமையில் புலப்படுகின்ற நிகழ்வுகளை வைத்து, விஷயங்களை வைத்து, கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்க்கையில் வெற்றி அடைந்துவிட்டதாக நினைத்துக் கொள்கிறோம். இதனால், நம் தேடல்கள் பெரிய அளவில் செல்வதில்லை. உலக அளவில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை நமக்கு எழுவதில்லை. உலக அளவில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்கள் நம் கண்களில் படுவதேயில்லை. அந்த முன்னேற்றத்தின் ஒரு கண்ணியாக நாம் இருக்க முயற்சி செய்திருந்தால், இப்போது இருப்பதைவிட பல மடங்கு உயர்வான வாழ்நிலையை நாம் எட்டிப் பிடித்திருக்க முடியும் என்று நம்மில் பலருக்கும் தெரியவில்லை.

இன்னும் சொல்லப் போனால், ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள், காப்புரிமை வாயிலாக பணம் சம்பாதிப்பது என்பதெல்லாம் நிறையப் பேருக்குத் தெரியாது. உதாரணமாக கூகுள் கம்பெனி ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டதனால், கூகுளின் வருமானத்தில் ஒரு சிறிய பகுதியானது, காப்புரிமைக்காக அமெரிக்காவிலுள்ள ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகத்துக்குக் கொடுக்கப்படுகிறது. இதன் வாயிலாக ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகம் மிக அதிக அளவில் வருமானமீட்டி வருகிறது. அந்த வருமானத்தினை தற்போது படிக்கக் கூடிய மாணவர்களின் உயர்கல்விக்கான ஆராய்ச்சிக்கும், கூகுள் போன்ற மற்ற ஒரு நிறுவனத்தை வேறொருதுறையில் உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் பயன்படுத்துகிறது. ஆனால் இந்தியாவிலோ மிகச்சில கல்வி நிறுவனங்கள்தவிர, உயர் கல்வி ஆராய்ச்சியில் நாம் இன்னும் காலடிச்சுவடைப் பதிக்கவில்லை. இதனுடைய வருமானத்தின் பலனை நாம் உணரவில்லை.

ஒருதுறையின் வளர்ச்சி மற்றொரு துறைக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதற்காக வெளிநாட்டில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்கள் முயற்சி செய்து வருகின்றன. இந்தியாவிலும் அத்தகைய முயற்சிகள் நடந்து வருகின்றன. உதாரணமாக, நாம் மேலே குறிப்பிட்ட ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகமும், ஆல் இண்டியா இன்ஸ்டிடியூட் ஆஃப் மெடிக்கல் சயின்ஸஸ் – புதுதில்லி (AIIMS) யும், ஐஐடி – தில்லி (IIT-DELHI) யும் இணைந்து ஸ்டேன்ஃபோர்டு இந்தியா பயோ டிசைன் (Stanford India Biodesign) என்ற ஒரு படிப்பினை உருவாக்கியுள்ளனர். இதை மருத்துவர்களும் பொறியில் பட்டதாரிகளும் படிக்கும் வண்ணம் உருவாக்கியுள்ளனர். இந்தப் படிப்பு படிப்பவர்கள் ஆறுமாதம் இந்தியாவில் உள்ள எய்ம்ஸிலும், ஆறுமாதம் ஐஐடி, தில்லியிலும் படிக்க வேண்டும். ஆறு மாதம் ஸ்டேன்ஃபோர்டு யுனிவர்சிட்டியில் படிக்க வேண்டும். இந்திய மாணவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே தங்கி படிப்பதற்கான எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல்– இவை தவிர, இந்த கோர்ஸ் படிப்பதற்கு மாதத்திற்கு ரூ.25 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாகத் தருகிறார்கள். இந்தப் படிப்பு பொறியியல் படித்தவர்களும், மருத்துவம் படித்தவர்களும் இணைந்து படிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்று இங்குள்ள மாணவர்களுக்குத் தெரியாது. இது போன்று எண்ணற்ற படிப்புகள் இப்போது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாம் இந்தத் துறையை எடுத்தால் தொடர்ந்து இந்தத் துறையை மட்டும்தான் படிக்க வேண்டும்; இதில் தான் வெற்றியடையலாம்; வளர்ச்சியடையலாம் என்ற பழைய பழக்கம் மாறி, எந்தத் துறையில் வேண்டுமானாலும் சென்று அந்தத் துறையில் சாதிக்கலாம் என்ற வாய்ப்பு உயர்கல்வித்துறையில் இன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக, ரோபா என்ற ஒரு கருவியை எடுத்துக் கொண்டோமென்றால் அது உணவுப் பொருள் உற்பத்தி, பயன்படும் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது. மருத்துவத்துறையில் ஓர் அறுவைச் சிகிச்சை செய்வதற்கும் அல்லது அறுவைச் சிகிச்சையின் போது மருத்துவருக்கு உதவி செய்யவும் பயன்படுகிறது. விவசாயத்துறையிலும் அது பயன்படுகிறது. கட்டுமானத்தொழிலுக்கும் பயன்படுகிறது. இவைபோன்று ஒருதுறையின் வளர்ச்சியை மற்றொரு துறைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்ற நோக்கத்தில் உயர்கல்வியில் நிறைய ஆராய்ச்சிகள் சிறந்த உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் நடந்து வருகின்றன.

ஒரு துறைக்கும் பிற துறைகளுக்குமான தொடர்புகள் அதிகரித்து வருகின்றன. ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குகின்றன. கல்வியில் இத்தகைய தொடர்புகளையும், சார்ந்து இயங்குவதையும் தவிர்க்க முடியாது. எனவே, நாம் பிளஸ் டூ முடித்தவுடன் மருத்துவம் கற்க விரும்பினால், நமக்கு மருத்துவப் படிப்பு கிடைக்காவிட்டாலும் கூட, வேறு பொறியியல் படிப்பு படித்துக் கூட பின்னாளில் மருத்துவம் சம்பந்தமான துறைக்குப் போவதற்கான வாய்ப்புகள் இன்றைக்கு ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. இது எண்ணற்ற மாணவர்களுக்குத் தெரிவதில்லை.

கிண்டி அண்ணாபல்கலைக்கழகத்தில் படித்த முன்னாள் மாணவர் ஒருவர், சிவில் இன்ஜினியரிங் படித்துவிட்டு, பின்னர் அமெரிக்காவுக்குச் சென்று இன்ஜினியரிங்கில் மாஸ்டர்ஸ் (எம்எஸ்) படித்துவிட்டு, பின்னர் கனடாவில் சென்று எம்பிபிஎஸ் படித்துவிட்டு, இன்று பப்ளிக் ஹெல்த் இன்ஜினியரிங் என்ற துறையில் பணியாற்றி வருகிறார். ஒரு மாநிலம் மற்றும் நாட்டில் சுகாதாரத்தை மேம்படுத்த உள்கட்டுமானங்களை ஏற்படுத்தும் பணியாகும் அது.

இவ்வாறெல்லாம் படிப்பதற்கான வாய்ப்புகள் இப்போது நிறைய உள்ளன. இன்றைய தலைமுறை உலகத்தின் தேவை எதுவெனக் கண்டறிந்து அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதில் தமக்கு எது விருப்பமோ அந்தத் துறையைப் பற்றிய தேடலைத் தொடர்ந்தால், எண்ணற்றவாய்ப்புகள் இருப்பது தெரியவரும். எனவே தேடும் பணியை உடனடியாகத் தொடங்குங்கள்.

(தொடரும்)

கட்டுரையாசிரியர்: **சமூக கல்வி ஆர்வலர்**
www.indiacollegefinder.org